★ டீசலை அனுப்பிவைக்கப் பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை

# வடபகுதியில் விவசாயம் பாதிக்கப்படுமானால் உணவுப் பஞ்சம் ஏற்படுமென அரசு அஞ்சுகிறது

வடபகுதிக்கு மீண்டும் டீசலை அனுப்பிவைப்பது குறித்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பாதுகாப்பு அமைச்சுடனும், கூட்டுப்படைத்தலைமையலுவலகத்துடனும் ஆலோசித்து வருகிறது. வட பகுதியில் மீண்டும் விவசாய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் டீசலை அனுப்பிவைப்பதற்கு ஆராயப்பட்டு வருகிறது. கடந்த 5 மாதங்களாக டீசல் இன்றி போக்குவரத்து சீரின்மை காரணமாக வட பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதுதொடருமானால் அடுத்த ஆண்டில் பொருளாதார விவசாயத்துறை பெரும் பின்னடைவை எதிர்நோக்க வேண்டியதுடன் உணவுப் பஞ்சம் ஏற்படும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்தே வடபகுதிக்கான டீசலை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (66)



பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 04 ஒலி 281 புதன் 21-11-1990 (கார்த்திகை 05) ஜ அவ்வல் 03


# மாவீரர்கள் சிந்திய இரத்தத்தினால் விடுதலை வரலாறு எழுதப்படுகிறது

## தலைவர் பிரபாகரன் நேற்று விடுத்துள்ள செய்தி



ஒரு விடுதலை வீரரின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு- ஓர் உன்னதமான இலட்சியம். உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு- வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; எமது வீரசுதந்திர வரலாறு, இந்த மாவீரர்களின் இரத்தத்தில் எழுதப்படுகிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல, மாவீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக எமது போராளிகளின் உறுதிக்கு ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன.

இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்ட வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த மகத்தான தியாகிகள்.

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தின் முதன்மையான விடுதலைப் போராட்டமாக சர்வதேசப் புகழடைந்திருக்கிறது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும் அடக்கப்படும் — 04 ஆம் பக்கம் பார்க்க

## செட்டிகுளம் இராணுவ முகாமை இடம்மாற்றுமாறு கோரிக்கை

செட்டிகுளம் இராணுவ முகாமை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என வவுனியாப் பிரஜைகள் குழுவினர் வவுனியா இராணுவ இணைப்பதிகாரியிடமும், அதிகாரிகளிடமும் கோரியுள்ளனர்.

செட்டிகுளம் முகாமினால் இங்குள்ள 23 பாடசாலைகள் இயங்கமுடியாது இருப்பதாக —04 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் தினம் குழி வெட்ட அம்மன் சிலை அகப்பட்டது

மாவீரர் தினத்தை முன்னிட்டு மரம் நாட்டுவதற்காகக் குழி வெட்டிய போது அழகிய அம்மன் சிலா விக்கிரகம் ஒன்று அக்குழியில் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டை கிழக்கு குளிப்பொன் வீதிச் சந்தியில் இடம் பெற்றது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட அழகிய — 04 ஆம் பக்கம் பார்க்க,

## கல்லடி முகாம் மீது காக்கஸ்ரோத் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான இராணுவ முகாமான கல்லடி இராணுவ முகாமின் காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் காக்கஸ்ரோத் தாக்குதலும் மற்றும் துப்பாக்கித் தாக்குதலும் — 04 ஆம் பக்கம் பார்க்க

யாழ் பெரியாஸ்பத்திரியில்

## வார்டுகளுக்கு வெளிச்சம் இல்லை சமயலறையில் உண்டு

யாழ் போதனாவைத்தியசாலையின் சில முக்கிய வார்டுகளுக்கு மின் வெளிச்சங்கள் இன்றி நோயாளிகள் அவதிப்டுகின்றனர்.

இதேநேரம் ஆஸ்பத்திரி சமயலறைப்பகுதியில்மின்வெளிச்சத்துடன் மின் விசிறிகளும் வேலை செய்வதைக் காண முடிகின்றது. (71)

## ஆரையம்பதி இராணுவம் மீது கிளைமோர் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து மண்முனைப் பகுதிக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் 4 இராணு — 04 ஆம் பக்கம் பார்க்க

## சீனியில் உப்பு கலப்படம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் அரசினால் பல நோ. கூ. சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட சீனியில் உப்பு நீர் கலக்கப்பட்டு உப்புத் தன்மையாக — 04 ஆம் பக்கம் பார்க்க

## மோசடிகளில் ஈடுபடும் நிதி நிறுவனங்கள் மீது நடவடிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கி நாணய சபை ஊழல்களில் ஈடுபட்ட நிதி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்கான புதிய சட்ட மூலம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இதன்படி ஒரு நிதி நிறுவ —04 ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள ஊர்காவற்படை மீது தமிழ் ஊர்காவற்படை தாக்கு

மணலாறு மாவட்டத்தில் உள்ள சூரியனாறு எனும் இடத்தில் ரோந்து சென்ற ஸ்ரீலங்காவின் 5 சிங்கள ஊர்காவற்படை மீது தமிழீழ மக்களின் ஊர்காவற்படை தாக்குதல் நடாத்தியது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தில் 4 சிங்கள ஊர்காவற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதி —04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி, உரும்பராயில் குண்டுவீச்சு வயோதிபத் தம்பதிபலி; கட்டிடங்கள் சேதம்

உரும்பராய்ப்பகுதியில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டுகளை வீசின. இதனால் சந்திரசேகரம் (80) என்பவரும் அவரது மனைவியும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். கே கமல் என்ற 10 வயதுச் சிறுவன் காயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்தன.

உரும்பராய் பட்டினசபை கட்டிடமும் சேதமடைந்தது. இரு குண்டுகள் ஒரே இடத்தில் விழுந்ததால் அவ்விடத்தில் பாரிய குழி ஏற்பட்டு நீர் கசியத் தொடங்கியுள்ளது.

கச்சாயிலுள்ள கைலாய பிள்ளையார் வீதியில் காலை 10 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலினால் பல வீடுகளும், அமிர் தாம்பிகை வித்தியாலயமும் சேதமடைந்தது. நுணாவில் கிழக்குப் பகுதியிலும் தாக்குதல் நடாத்தப்பட்டதில் பல வீடுகள் சேதமாகின.

(48, 23, ப-32, ப-4)

## கப்பலில் பொருட்களை இறக்க ஊரடங்கை நீக்கக் கோரிக்கை

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அண்மையில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சினையடுத்து குமணா, விங்கோறேடேர்ஸ் ஆகிய கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டுள்ளன.

யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் இன்று இது தொடர்பாக அத்தியாவசிய — 04 ஆம் பக்கம் பார்க்க

# தள்ளாடி இராணுவ முகாமில் முஸ்லிம் இளைஞர்க்குப் பயிற்சி

மன்னார்—தள்ளாடி இராணுவ முகாமில் முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஊர்காவற் படையினராக நியமனம் பெற்றுத் தத்தம் கிராமங்களைக் காவல் செய்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்ததாக கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### சரவணமுத்து கணபதிப்பிள்ளை

(அப்பா)

(ஓய்வுபெற்ற காணி அபிவிருத்தித் திணைக்கள ஓவசியர்)

தோற்றம் : 14 - 03 - 1923

மறைவு : 23 - 10 - 1990

அன்புக்குரியவரே ஆருயிர் நாயகனே
அரவணைப்பில் நாமிருந்தோம் ஆறாத்துயராச்சே
விளக்கேற்றி வைத்தீரே விளக்கணைந்து நாளாச்சே
வீட்டில் உள்ளோர் கதறியழ விண்ணுலகம் போனீரே.

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

இங்ஙனம்,
பிரிவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

11098


## ஒபறோய் ஹோட்டல்

### அரசுமீது தினேஷ் குற்றச்சாட்டு

கொழும்பில் லங்கா ஒபறோய் ஹோட்டல் பங்குகளை விற்பதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக அரசுமீது மகரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் குறைந்த விலையில் இந்த ஹோட்டல் பங்கை விற்க இரகசிய பேரம் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

## மத்திய கல்லூரிக்குப் புதிய அதிபர்

நா. க. சண்முகநாதபிள்ளை யாழ் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக 27ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் வகுப்பு II தரத்தைச் சேர்ந்தவராவர். இவர் முன்னர் நயினாதீவுக் கொத்தணி அதிபராகவும், பின்னர் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் கடைமையாற்றியவர். இவர் யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவர்.

தற்போது யாழ் மத்திய கல்லூரியின் அதிபராக உள்ள ந. இராஜரத்தினம் இளைப்பாறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ப-17)

## மாவீரர் தினம்

### போர்க்காலச் சிந்தனை -1

''தலைவன் வழிநடத்தல் தப்பென்று கொள்ளாதீர்
நினைவார் கெடுவர் நிசம்

(போர்க்குறள்)

எங்களை வழிநடத்திச் செல்லும் தளபதி எம்மைப் பிழையான வழியிலே இட்டுச் செல்கிறார் என்று வீரர்கள் எண்ணுதல் கூடாது. அவர்கள் அப்படி நினைப்பார்களேயானால் அவர்கள் நிச்சயம் அழிந்து கெடுவர்; மக்களும் அப்படி எண்ணுவது தவறாகும்; என்பது மேற்போந்த போர்க்குறளின் கருத்தாகும்

அறநெறி குன்றித் தீநெறி ஓங்கிப் பரவும் காலத்திலேயும், ஒரு இன அழிப்பு நடைபெறும் காலத்திலும், அறநெறியைக் காப்பதற்காகவும்,இனத்தைக் காப்பதற்காகவும் அவதார புருஷர்கள் தோன்றுகின்றனர். அந்த வீரபுருஷர்கள் தமது குறிக்கோள் நிறைவேறும் வரை தமது பணிகளில் நின்றும் ஓய்வதில்லை. இதனை நாம் மனதில் இருத்தி, நம்மைக் காக்க வென்று வந்த தலைவனின் வழியைப் பின்பற்றுவோமாகுக.

''என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர் என்னை
முன்னின்று கல்நின்றவர்''

— திருக்குறள்

என்னுடைய தலைவனை எதிர்த்து நின்று இறந்தோர் பலராவர்; ஆதலால் பகைவர்களே! என்னுடைய தலைவனை எதிர்த்து நிற்காதீர்கள் என்பது திருக்குறட்கருத்து.

— முருகனடியான்

## தமிழ் ஆசிரியர்களுக்கு முஸ்லிம்களால் தொல்லை

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்கள் முஸ்லிம்களால் இம்சிக்கப்படுவதாக அங்கிருந்து வந்த ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கு இக்கதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் ஆசிரியர்கள் தங்குவதற்கு முஸ்லிம் பகுதிகளில் இருப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றதாம்.

இத்தகைய நிலைமைகள் காரணமாக வடக்குக், கிழக்கிற்கு வெளியேயுள்ள பல தமிழ் ஆசிரியர்கள் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளனராம்.

சில தமிழ் ஆசிரியர்கள் வடக்குக், கிழக்கு மாகாணத்திற்குத் தங்களை இடமாற்றம் செய்யும்படி கல்வி அமைச்சைக் கேட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (43)

## யாழ் மாவட்டக் கூட்டுறவாளர் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாள்

# சிறப்புச் செய்தி

இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வோர் ஜீவனும் மரணத்தை அடையும் என்பது உண்மையே. இந்த மரணங்கள் அர்த்தம் உள்ளவையாக இருந்தால் மற்றையோர் போற்றுவார்கள். ஆகையினாலேயே தமிழீழ மண்ணிற்காகவும், மக்களிற்காகவும் போராடி மரணத்தை தழுவிக்கொள்வோர் மக்கள் போற்றும் மாவீரராகின்றனர். இந்த வீரர்களை ஆண்டுதோறும் கூட்டுறவாளர்கள் நினைவு கூருவதுடன் அவர்கள் சென்ற பாதை வழியே நாமும் செல்வோம்! செயல்படுவோம்.!!

கூட்டுறவாளர்,
யாழ் கோட்டம்.
21 - 11 - 1990

11101

## சுன்னாகத்தில் பங்கீட்டு உணவு விநியோகம்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் உணவு முத்திரைப் புள்ளி இலக்கம் 4க்குரிய பொருட்களைப் பாவனையாளருக்கு வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளது உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் தங்கள் கிளைகளுடன் தொடர்பு கொண்டு பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கருதி மூடப்பட்ட கிளைகள் 21, 21ஏ, 20, 20பி, 22ல் உணவு முத்திரை வைத்திருந்த பாவனையாளர்கள் தங்கள் தங்கள் உணவு முத்திரைகளுக்குரிய பொருட்களைப் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளை 21க்குரியவர்கள் உடுவில் கிளை 7உடன் இணைந்த கட்டிடத்திலும், 21ஏ க்குரியவர்கள் இணுவில் சந்தியிலும், கிளை 20, 20பிக்குரியவர்கள் இணுவில் கந்தசாமி கோவிலடியிலும், கிளை 22க்குரியவர்கள் கிளை 23 ஏழாலை களவாவோடையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்சொல்லப்பட்ட கிளைகளின் பாவனையாளர்கள் தங்களுக்குரிய உலர் உணவுப் பங்கீட்டுப் பொருட்களையும் சொல்லப்பட்ட இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

UNIVERSITY OF JAFFNA

**Faculty of Agriculture Kilinochchi**

Applications will be received by me from suitable candidates for the following post up to 1990.11.27.

Temp. Demonstrator in Agricultural Chemistry.

**Salary Scale:**

Temp. Demonstrator: 3,250/- p.m. (fixed)

**Qualifications:**

TEMPORARY DEMONSTRATOR:

A graduate or person awaiting results of a Final/Degree Examination.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an interview scheduled to be held on 1990.11.28 at 10.00 a.m. in the Board Room of this University.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990.11.19.

11099

## ஒயில் திருடியவர் அகப்பட்டார்

கைதடி நுணாவில் வைரவர் கோயில் வீதியில் உள்ள றான்ஸ்போமரில் ஒயில் திருடிய ஒருவர் நூறு லீற்றர் ஒயிலுடன் விடுதலைப் புலிகளின் நுணாவில் பிரதேசப் பொறுப்பாளரினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கு உடந்தையாகவிருந்த, றான்ஸ்போமருக்கு அருகாமையில் உள்ள குடும்பஸ்தரும், சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு முன்னால் எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒரு வியாபாரியும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ப-4, ப-5)

## விசர்நாய் கடித்து மரணம்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகிய பு. பிரேமானந்தன் (13) என்ற இளைஞர் ஏற்புவலியினால் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர் மரணமானார்.

## மாகியம்பதியில் இலவச வகுப்புக்கள்

சண்டிலிப்பாய் மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்திலும், தனியார் வீடுகளிலும் அப்பகுதி வறிய மாணவர்களுக்கு இலவசக் கல்வி வகுப்புக்கள் தினமும் காலை 6. 30 தொடக்கம் மாலை வரை நடாத்தப்பட்டு வருகின்றன.

மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்தினர் இந்த வகுப்புக்களை ஒழுங்கு செய்து நடாத்திவருகின்றனர்.

## கொழும்புக்கு 30 தபாற் பொதிகள் அனுப்பப்பட்டன

யாழ் குடாநாட்டுத் தபாலகங்களிலுள்ள 30 தபாற் பொதிகள் நேற்று முன்தினம் யாழ்பிரதம தபாலகத்திலிருந்து தபாலக உத்தியோகத்தர், ஊழியர்களால் யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறி மூலம் பருத்தித்துறைக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கொழும்பு செல்லவிருக்கும் கப்பலில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது (33)

## மூன்று படகுகள் நீரில் மூழ்கின

கொம்படியில் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற படகுகளில் மூன்று நீரில் மூழ்கின.

நீர்ஆழம் குறைந்தமையால் பிரயாணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இச்சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

படகுகள் நீரில் மூழ்கியதால் கொழும்பு செல்லும் பயணிகள் நீரில் நனைந்ததோடு, அவர்கள் கொண்டு சென்ற கடவுச் சீட்டு மற்றும் பெறுமதி மிக்க பொருட்கள் யாவும் நீரில் மூழ்கின. (43)

## கூட்டுப்பிரார்த்தனை செய்யத்தடை

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவிலில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளனர். ஆலயத்தில் நித்தியகால பூசைகள் செய்யவும் பக்தர்கள் வழிபாடு செய்யவும் முடியாதுள்ளது.

இந்த ஆலயத்தை வவுனியா பிரஜைகள் குழுவுடன் இராணுவ அதிகாரிகள் சென்று பார்வையிட்டதாகவும் இராணுவத்தை விலக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இராணுவம் வெளியேறிய பின் இவ் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனைகள்மேற் கொள்ளக்கூடாதெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாம். (38)

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு:

# யுத்தம் உடன் முடியப்போவதில்லை

# சில வருடங்களும் ஆகலாம்!

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் இன்றுடன் முடியப்போவதில்லை. சில மாதங்களோ அல்லது சில வருடங்களோ எடுக்கலாம்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் வல்வெட்டித்துறையில் முதலுதவிச்சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மருத்துவப் பொறுப்பாளரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரும், கவிஞருமான மு. வே. யோ. வாஞ்சிநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இந்தப் போராட்டத்தின் போது பெருமளவு போராளிகளும், பொதுமக்களும் காயமடையும் நிலை ஏற்படலாம்.



அந்தந்தப்பகுதிகளில் முதலுதவி நிலையங்களை அமைப்பதன் மூலம் குருதிப் பெருக்கினைத் தடுத்து கூடியளவு மரணங்களைத் தவிர்க்கலாம் என்றார். (22)

## பக்கத்து வீட்டுச் சகவாசமும் இராணுவத்துக்குப் பிடிக்காதாம்

வவுனியாவில் கரப்பங்காடு, குருமன்காடு, குட்செட் ஆகிய பகுதி மக்களில் தமது சொந்த இடங்களில் வீடுகளில் சென்று குடியேற விரும்புபவர்கள் நகரக் கமாண்டருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாம்

வைரவப்புளியங்குளம், குருமன்காடு, கரப்பங்காடு, குட்செட் பகுதி மக்கள் இராணுவ அனுமதியுடன் தங்கியிருப்பதோடு அயல் வீடுகளுக்கு விஜயம் செய்வதும் தடை செய்யப்பட்டு இருக்கிறது. மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை வெளியில் நடமாடுவதும் இராணுவ அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. (38)

## வலிப்பு நோயாளர்க்கும் மணவாழ்வு வாய்ப்பு

வலிப்பு நோயுள்ளவர்களும் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதற்கேற்ப இந்துமதத் திருமணச் சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்று நரம்பியல் நிபுணர்கள் சங்கம் மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சங்கத்தின் கருத்தரங்கு ஒன்றில் இதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து உட்கொள்வதன் மூலம் வலிப்பு நோயுள்ளவர்களில் 85 வீதமானோர் குணமடைய வாய்ப்பு உண்டென்று இக்கருத்தரங்கில் உரையாற்றிய பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் ஜெகநாதன் தெரிவித்தார். பதற்றம், பரபரப்பு ஆகியன வராமல் பார்த்துக் கொள்வதாலும், புகை பிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதாலும் வலிப்பு நோயைப் போக்க முடியும் என்றும் அவர் கூறினார் வலிப்பு நோய் தீராததல்ல என்று மேலும் பல நிபுணர்களும் தம் உரையில் குறிப்பிட்டனர்.

## தமிழ்ப் பகுதிகளில் பலர் மார்பு நோய்களினால் பாதிப்பு

தமிழ்ப் பிரதேசங்களில் மார்பு நோய் பலருக்கு ஏற்பட்டு வருவதாகவும், பலர் இந்நோய்க்கு இலக்காகி மரணம் அடைந்து வருவதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்தகால ஸ்ரீலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளினாலும் வறுமையினாலும், பொருளாதாரத் தடையினாலுமே இந்நோய் அநேகருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவகப்பகுதியிலும் பலர் மார்பு நோயினால் மரணமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (24)

## ராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கே மின் விநியோகம்

வவுனியா நகரினுள் விறகு கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. சமையலுக்கான வாயு சிலிண்டர்களை அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் விற்பனைசெய்ய இராணுவம் அனுமதித்துள்ளது.

இதே வேளை வவுனியா நகரத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு மாத்திரமே இனிமேல் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

மற்றும் வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வரும் முஸ்லிம்களுக்குத் தேவையான மேலதிக தங்குமிடம், உணவு, சுகாதார வசதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிய வருகிறது. (38)

## மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒழுங்காக உள்ள நீர்க்குழாய்களை பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் அண்மையில் திருத்தியமைத்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் மிக மட்டுப்படுத்தப்பட்ட குழாய்நீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மின்சாரம் இன்மையால், ஜெனரேட்டர் மூலம் நீர்த்தொட்டியில் நீர் சேமிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (50)

## தாயும், மகனும் மரணம்

முல்லைத்தீவில் யானையின் தாக்குதலால் தாயும் மகனும் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்துள்ளனர்.

சம்பவதினம் காட்டுப்புறத்தில் குடிசை அமைந்திருக்கும் இவர்களது இடத்தை யானை முற்றுகையிட்டு அவ் வீட்டிலிருந்த தாயையும் மகனையும் அடித்துக் கொன்றுள்ளது.

தந்தையும் மற்றைய பிள்ளைகளும் தெய்வாதீனமாகத் தப்பியுள்ளனர். இவர்களது குடிசையையும் யானை சேதப்படுத்தியுள்ளது. (38)

யாழ் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**தற்காலிக செய்முறைக் காட்டுநர் மருத்துவ பீடம்**

மருத்துவபீடத்திலுள்ள Pre and Para Clinical துறைகளில் செய்முறைக் காட்டுநராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990. 11. 30-ம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் விண்ணப்பதாரர்கள் 1990 12 06 திகதி வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

யாழ் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 11.19

11104

## உலக அரங்கில்

### இஸ்ரேல் இராணுவம்-பலஸ்தீன கெரில்லாக்கள் மோதல்

தென் லெபனான் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இஸ்ரேலிய ராணுவ அதிகாரி ஒருவரும் நான்கு பலஸ்தீன கெரில்லாக்களும் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ராணுவம் அறிவித்துள்ளது. தென் லெபனானில் உள்ள இஸ்ரேலியப் பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இம்மோதல் சம்பவம் நடைபெற்றுள்ளது. பலஸ்தீன கெரில்லாக்களை இலக்கு வைத்து இஸ்ரேலிய ராணுவம் இரவோடு இரவாக முன்னேறிக்கொண்டிருந்தபோது பலஸ்தீன கெரில்லாக்கள் இவர்கள் மீது எதிர்பாராத விதமாகத் திடீர்த் தாக்குதலை ஆரம்பித்தனர். இதனைத்தொடர்ந்து சில மணிநேரம் அப்பகுதியில் மோதல் நடைபெற்றது. இது இம்மாதத்தில் இப்பகுதியில் நடைபெற்ற மூன்றாவது மோதல் சம்பவமாகும்.

### 'தோழர்' பதம் சீனாவில் நீக்கப்படும்

சீனாவில் 'தோழர்' என்று அழைக்கப்படும் முறைமை நீக்கப்படவுள்ளது. சீனாவில் கடந்த பல வருடங்களாக தோழர் என்ற பதம் ஒருவரை ஒருவர் அழைக்கப் பயன்பட்டு வந்தது. அரச வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படும்போது இப்பதம் பாவிக்கப்பட்டு வருகிறது.

தோழர் என்று அழைக்கப்படுவது குறித்து அரச பதவியில் உயர் பதவி வகிப்பவர்கள் சிலர், தமது ஆட்சேபனையைத் தெரிவித்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெண்களைத் தோழர் என்று அழைக்கப்படுவதையும் பலர் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். எனினும் தோழர் என்று அழைக்கப்படுவது பெண்களுக்கு ஆண்களுடனான சமமான அந்தஸ்தை வழங்குவதையே குறிக்கிறது என பழமைவாதிகள் வாதிடுகின்றனர். எனினும் பெண்களைத் தோழர் என்று அழைக்கப்படுவது தற்போதைய இளம் தலைமுறையினரிடையே ஒரு நகைப்பிற்கிடமான ஒரு பதமாகவே இருப்பதாக சீனப்பத்திரிகையான மக்கள் தினசரி தெரிவிக்கிறது.

### காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் 'எரிப்பு' நடவடிக்கை

காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. காஷ்மீர் தீவிரவாதிகள் இந்திய ராணுவத்தினரைத் தாக்கினால் அதற்குப் பழிவாங்கும் முகமாக ராணுவம் கடைகள், வீடுகள் என்பவற்றைத் தீக்கிரையாக்கின்றனர். கண்ணில் படும் பொதுமக்களையும் சுடடுக்கொல்கின்றனர். ஸ்ரீநகர், அகலறநாக், கண்டுவரா, சோபூர் போன்ற காஷ்மீர் நகரங்களிலேயே இச்சம்பவங்கள் அதிகமாக இருப்பதாக அங்கிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய ராணுவத்தினர் வீடுகள் கடைகளைப் பற்ற வைக்க பொஸ்பரஸ் தூள் மண்ணெண்ணெய் போன்றவற்றை உபயோகிக்கின்றனர். காஷ்மீர் தீயணைப்புப்படைத் தலைவர் பஷீர் அபாசியின் தகவலின்படி மோதல், தீவைப்புச் சம்பவங்கள் நடைபெற்றால் இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே குறிப்பிட்ட ஒரு பகுதி தீப்பற்றி எரிவதாகத் தமக்கு ராணுவத்தினர் அறிவிப்பதாகக் கூறுகிறார்.

## 'புலிகளின்குரல்' பண்பலை வானொலிசேவை ஆரம்பம்

'புலிகளின் குரல்' வானொலி சேவை இன்று புதன்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக, நிதர்சனம் பிரிவினர் அறிவித்துள்ளனர். பண்பலை வரிசையில் 94 மீற்றரில் (எப். எம் 94) புலிகளின்குரல் ஒலிபரப்பைக் கேட்கலாம் என அறிவிக்கப்படுகின்றது.

## மன்னாருக்கு மின்விநியோகம் விரைவில் கிடைக்கும்

மன்னார் மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபை, வடமாகாண பிரதிப் பொது முகாமையாளரைப் பணித்துள்ளதாக மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மன்னாருக்கான மின்சாரம் மதவாச்சியூடாக வருவதால் உடனடியாக அம்மாவட்ட மின்பொறியியலாளர்கள் மற்றும் மின் அத்தியட்சகர் திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் பற்றி எந்தவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (70)

## தமது தியாகங்களால் உலகை கவர்ந்தவரே மாவீரர்கள்

மாவீரர்கள். தமிழீழத்தின் அத்திவாரக் கற்கள். அவர்கள் போராட்ட வரலாற்றில் உலகத்தோரால் மதிக்கப்படுபவர்கள், அகிம்சைப் போராட்டத்தில் அண்ணல் காந்தியை வென்றவர்கள். இவ்வாறு யாழ் மாவட்ட கூட்டுறவாளர்கள் விடுத்த சிறப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தன்மான உணர்வால் தம் உயிரைக் கொன்றவர்கள். தாம் கொண்ட இலட்சியத்தால் கரும்புலிகளாய் மாறி காற்றோடு கலந்தவர்கள்.

இத்தகைய தியாகங்களால் உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து உணர்வுகளைத் தூண்டிவிட்ட உத்தமர்களாக உயர்ந்து மதிக்கப்படுகிறார்கள்.

அத்தகைய மாவீரர்களை நினைவுகூர ஓரணியில் திரண்டு கொள்வதில் நாம் அனைவரும் பெருமையடைகின்றோம். அவர்களின் பாதையில் புதிய கூட்டுறவுச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைத்து அவர்களின் இலட்சியத்தை வென்றிட எமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தி மலரப்போகும் தமிழீழத்தில் மதிப்புமிக்க நிறுவனத்தின் உறுப்பினரெனும் பெருமையோடு மாவீரரின் கனவினை நனவாக்கிட உழைத்திடுவோம். (66)

## கப்பலில் வந்த தபால் பொதிகள் தரம்பிரிக்கும் வேலை ஆரம்பம்

கடந்த 5 மாதங்களாக கொழும்பில் தேங்கியிருந்து கப்பலில் கொண்டுவரப்பட்ட 441 தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தில் வைத்துத் தரம்பிரிக்கப்பட்டன.

தபாலகத்தில் பிரதமதபால் அதிபர் தொடக்கம் சிற்றூழியர் வரை நேற்று ஊரடங்குச் சட்டம் இருந்த போதிலும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்குடன் தபாலகத்திற்கு வந்திருந்து வேலைகளில் ஈடுபட்டனர்.

இத் தபால் பொதிகள் நேற்றைய தினமே உள்நாட்டுத் தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டன (33)

## ஆசிரியர்க்கு அடையாள அட்டை வழங்கத் திட்டம்

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களுக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக மேல் மாகாண அதிபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### தாதி பயிலுனர் பரீட்சை முடிவுகள்

யாழ் தாதியர் பாடசாலையில் பயிலும் தாதி பயிலுனர்களின் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின

தாதிபயிலுனர் பரீட்சை முடிவுகளை தாதியர் பாடசாலை அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம். (71)

### சீனி...

இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனியில் இனிப்பை விட உப்புத்தன்மை மேலோங்கியிருப்பதினால், இச்சீனியை உபயோகிக்க முடியாமல் இருப்பதாக உடையார்கட்டு, சுதந்திரபுரம் போன்ற பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ப32)

### சிங்கள...

யான ஒருவர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டார்.

சிங்கள ஊர்காவற்படையினரிடமிருந்து:- 303 ரக துப்பாக்கி—4; மகசீன்—4; 303 ரவைகள் —106, கோல்ஸ்ரர் —1 என்பன தமிழீழ ஊர்காவற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

ஆக்கிரமிக்கப்பட்ட எமது பகுதியில் சிங்கள ஊர்காவற்படை மீது, தமிழீழ ஊர்காவற்படை நடாத்திய தாக்குதல் போராட்டத்தில் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ((71)

### கப்பலில்...

சேவைகள் நாயகத்துடனும், பாதுகாப்பு அமைச்சுடனும் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு நடைபெற்ற சம்பவத்தினை எடுத்துக் கூறுவார்.

இதேவேளை பருத்தித்துறைக்கு கூட்டுறவுச் சங்க லொறிகள் சென்று கப்பலில் இருந்து பொருட்களை ஏற்றிவர ஏதுவாக ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறும் பாதுகாப்பு அமைச்சை அரச அதிபர் கேட்கவுள்ளார். (66)

### மாவீரர்...

அம்மன் சிலா விக்கிரகமே இவ்வாறு அகப்பட்டது.

அந்த விக்கிரகத்தை தக்கண்ட அங்குள்ள பொது மக்கள் அரோகரா!! அரோகரா!! அம்மாளாச்சிக்கு அரோகரா! என்று சத்தமிட்டு நிலத்தில் விழுந்து கும்பிட்டனராம்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற பெரியவர்கள் ஒன்று கூடி அந்த அதிசய அம்மனுக்குக் கோயில் எழுப்பத்திட்டமிட்டனராம். (12)

### மோசடி...

னத்தின் தலைவரோ, ஊழியரோ பொதுமக்கள் சொத்தில் கையாடல், மற்றும் முறைகேடான முறையில் நடந்து கொண்டமை மத்திய நாணய சபையினால் உறுதிப்படுத்தப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்படவுள்ளது.

### மாவீரர்கள்...

மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப்போராட்டம் ஒரு முன்னுதாரணமாக, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப்பெரிய இந்தியப் படைகளையும் தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கியஇடத்தைப் பெற்றிருக்கின்றன. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த யுத்தங்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது.

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள் என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள் நான் பல்லாண்டுகாலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கிறது.

இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன். அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும் வீரத்தையும் விடுதலைப் பற்றையும் எண்ணிப் பார்க்கும் போது எனது உள்ளம் பெருமை கொள்கின்றது

இந்த மண்ணில் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள் இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்தபெற்றோராகியநீங்கள் நிச்சம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை, சரித்திரமாகிவிட்டார்கள்.

எமது தாய் நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப்பிணித்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்.

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒரு நாள் நினைவாக்கும்.

### செட்டிகுளம்...

வும், இவ்வருட காலபோகச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து உயர்மட்டத்தில் பேசி ஆவன செய்ய கால அவகாசம் தருமாறு இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

### கல்லடி..

மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிறு இரவு 8. 45 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்தனர். (71)

### ஆரையம்பதி...

வத்தினர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களை மீட்கவென ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது ஒல்லிக்குளத்தில் வைத்து கிளைமோர் தாக்குதல் நடாத்தியதில் 3 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இதன்பின்பு இராணுவத்தினர் பொது மக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

மண்முனைத் துறையை போக்குவரத்துக்கோ அல்லது இந்த ஆற்றில் மீன் பிடிக்கவோ இராணுவத்தினரால் தடைவிதிக்கப்பட்டிருந்ததும் இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வறுமையால் வாடிக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது (71)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 21.11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.